விலைரூபா 1-00

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 சித்திரை 22 றஜப் 10 இதழ் 81

யாழ்ப்பாணம் புதன்கிழமை 5—5—82

## விளக்கமறியல் உத்தரவை ரத்துச்செய்யுமாறு விண்ணப்பம்

### யாழ். நீதவான் நாளை தீர்ப்பு வழங்குவார்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு உப்புக்கூட்டுத்தாபன சுற்றுலா விடுதியில் மர்மமான முறையில் மரணமான திருமதி மாலினி மகேந்திரனின் மரணவிசாரணையில் திரு. செ. சிவகுமார் சார்பில் சட்டத்தரணி திரு. ந. சத்தியேந்திரா ஆஜராகியிருந்தார்.

குற்றவியல் சட்டத்தின் 15ம் அத்தியாயத்தின் 370ம் பிரிவின் கீழ் நடாத்தப்படும் இவ் விசாரணை, மரணவிசாரணை அதிகாரத்திற்கு மேற்பட்டது அல்ல என்றும், சாட்சிகள் கொடுத்த சாட்சியத்தின்அடிப்படையில் என்றாலும், எக்காரணத்தினலும், விளக்கமறியலில் வைக்க அதிகாரம் இல்லை என்பதால், விளக்கமறியலில் வைக்க செய்யப்பட்ட உத்தரவை இரத்துச் செய்யுமாறும் சிரேஷ்ட சட்டத்தரணி திரு. ந. சத்தியேந்திரா வாதாடினர்.

மேற்படி விண்ணப்பம் தொடர்பான தீர்ப்பை ஆறும் திகதி வியாழக்கிழமை வழங்குவதாக யாழ் நீதவான் திரு. ரி. ஜோகநாதன் நேற்றுஅறிவித்து அதுவரை செ. சிவகுமாரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டார். (சி)

# அமைச்சரவையில் திடீர் மாற்றங்கள்!

(கொழும்பு)

அமைச்சரவையில் நேற்று திடீர் மாற்றங்கள் செய்யப்பட்டன. விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சி அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா சுகாதார அமைச்சராகவும்; சுகாதார அமைச்சர் திரு. காமினி ஜயசூரிய, விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சி அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தவிர பிரதி அமைச்சர்கள் மட்டத்திலும் சில மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

புதிய அமைச்சுக்களை ஏற்றுக்கொண்டவர்கள்அனைவரும் நேற்றுக்காலை ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டனர்.

### முழுவிபரமும் வருமாறு

விவசாய அபிவிருத்திஆராய்ச்சித்துறை அமைச்சராகப் பதவிவகித்த திரு. ஈ. எல். சேனநாயக்கா நேற்று சுகாதார அமைச்சராக பதவியேற்றுக்கொண்டார். சுகாதார அமைச்சராகப்பதவி வகித்த திரு. காமினி ஜயசூரியா விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சித் துறை அமைச்சராக பதவியேற்றுக்கொண்டார். மகாவலி அபிவிருத்தி திட்டப்பிரதி அமைச்சராகப் பதவிவகித்த திரு. நந்தாமத்தியூ இரத்தினபுரி மாவட்ட அமைச்சராக பதவியேற்றுக்கொண்டார். இரத்தினபுரி மாவட்ட அமைச்சர் ஜனுப் எம். எல்.எம். அபுசாலி மகாவலி அபிவிருத்தி திட்ட பிரதியமைச்சராகப் பதவியேற்றுள்ளார். பிரதி

(8 ம் பக்கம் பார்க்க)

## சிவகுமாரின் அறையில் இரத்தக் கறைகள்

(யாழ்ப்பாணம்)

சிவகுமாரின் அறையில் சில இரத்தக்கறைகள் காணப்பட்டன. என்றும்அவற்றைச்சுரண்டிப்பரிசோதனைசெய்யும்பொருட்டு தமக்கு அனுப்பிவைக்குமாறு இரசாயனப் பகுப்பாய்வாளர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார்.

இதுதொடர்பாக யாழ். நீதவான் திரு. ரி. ஜோகநாதன், நேற்றைய விசாரணையில் சமூகம் அளித்திருந்த வவனியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. பேர்ஸி. விஜயநாயக்காவிற்கு கிளிநொச்சி நீதிபதி முன்னிலையில் சீல் வைக்கப்பட்டுள்ள ஆனையிறவு வீட்டை திறந்து இரத்தக்கறைகளை சுரண்டி நீதிமன்ற இலச்சினையுடன் இரசாயன பகுப்பாய்வாளருக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார். அத்துடன் கிளிநொச்சி தபால் அதிபர், தபால் அதிபரின்மகன் ஆகியோரிடமிருந்து வாக்குமூலங்களைப் பெறுமாறும் திரு. விஜநாதன் என்பவரிடம் சம்பவம் நடந்த நாட்களில் அவரது நடமாட்டம் குறித்து வாக்கு மூலம் பெறுமாறும் கிளிநொச்சிப் பொலிசாருக்கு யாழ். நீதவான் உத்தரவிட்டார். (சி)

## அமைச்சர் பலி

லண்டன், மே, 4

அல்ஜீரிய வெளிநாட்டமைச்சர் நேற்றிரவு அவரது விமானத்தில் சென்று கொண்டிருந்த போது துருக்கியின் எல்லையருகில் விமானம் விழுந்து நொறுங்கியபோது அவர்பலியானர்.

### மாலினி மர்ம மரணம்:

## "இரசாயன பகுப்பாளரின் அறிக்கைமூலம் விஷம்பற்றிய விபரம் தெரியவரும்" சட்டவைத்திய அதிகாரி

(நமது நிருபர் க. சிவதாசன்)

"எனது பிரேத பரிசோதனையில் இருந்து, மாலினிக்கு விஷத்தினல் ஏற்பட்ட தாக்கத்தால் இருதயம் இயங்க மறுத்தமையால் மரணம் ஏற்பட்டுள்ளது. இரசாயன பகுப்பாளரின் அறிக்கை கிடைத்த பின்னர்தான் விஷம் என்ன மாதிரியான தென்பதைக் கூறமுடியும்."

இவ்வாறு யாழ். பதில் சட்டவைத்திய அதிகாரி டாக்டர் ந. சரவணபவானந்தன், கடந்த மாதம் 15ம் திகதி ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபன சுற்றுலா விடுதியில் மர்மமான முறையில் மரணமடைந்த மாலினியின் மரண விசாரணை நேற்று யாழ். நீதிமன்றத்தில் தொடர்ந்து நடைபெற்ற போது தெரிவித்தார். தொடர்ந்து அவர் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

"1982ம் ஆண்டு சித்திரை மாதம் 16ம் திகதி இரவு பதினெரு மணியளவில் நான் திருமதி மாலினி மகேந்திரனின் உடலை பிரேத பரிசோதனை செய்தேன். அவரின் உடலை, திருவாளர்கள் கே. மகேந்திரன், செ. சிவகுமார் செ. பரப்சோதி ஆகியோர் அடையாளம் காட்டினர்கள். அவரின் உடலின் வலதுகையின் பின்புறத்தில் இரண்டு ஊசியால் குத்தப்பட்ட காயங்களிருந்தன. இடதுகையின் வெளிப்புறத்தில் அத்தகைய மூன்று காயங்களிருந்தன. உட்புறக்காயங்களாக ஈரல், சிறுநீரகம், மூளை ஆகியவை கண்டிப்போய் இருந்தது. வயிற்றின் உட்புறமும் கண்டல் பட்டு இருந்தது. வயிற்றில் மூன்று அவுன்ஸ் நிறை கொண்ட பால்நிற மஞ்சளடைந்த திராவகம் காணப்பட்டது. அத்திராவகத்தில் தேங்காய்ப்பால் மணம் வீசியது. மர்மஉறுப்புகளில் ஒரு காயமுமில்லை. வெள்ளையான திரவம் காணப்பட்டது.

"ஈரல், சிறுநீரகம், சிறுகுடல், இரத்தம், வெள்ளைத் திரவம், வயிற்றில் அடங்கிய திரவம் ஆகியவற்றை இரசாயனப்பகுப்பாய்வாளருக்கு அறிக்கைகோரி அனுப்பிவைத்துள்ளேன். எனது பரிசோதனையில் இருந்து இம் மரணம் விஷத்தினல் ஏற்பட்ட இருதய தாக்கத்தால் ஏற்பட்டுள்ளதென அறிகிறேன்.

நீதி: பரிசோதனையின் போது இறுதியாக அன்றிரவு ஏதாவது ஆகாரம் அருந்திய தாகத் தென்பட்டதா?

பதில்: வயிற்றினுள் மூன்று அவுன்ஸ் திரவம் மட்டுமே காணப்பட்டது. ஆனல் சாப்பாட்டுவகை எதுவும் காணப்படவில்லை.

நீதி: ஆகாரம் சாப்பிட்டபின் எவ்வளவு நேரத்தின்பின்ஞல் ஜீரணித்த ஆகாரம் குடலை விட்டு வெளியேறும்?

பதில்: 15 அல்லது 20 நிமிடங்களின் பின்னர் வெளியேற

(8ம் பக்கம் பார்க்க)

மக்கள் வங்கி பிரதானவீதிக் கிளை, யாழ்ப்பாணம்.

## ஏல விற்பனை

1982ம் ஆண்டு வைகாசி மாதம் 8ந் திகதி சனிக்கிழமை காலை 10 மணியளவில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை குருநகர் கடற்தொழில் அபிவிருத்திச் சங்க எரிபொருள் நிலைய முன்றலில் (குருநகர் துறைமுகம்) பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1 வள்ளம் 32அடி நீளம் இலக்கம் KNR 5

2. இயந்திரம் யன்மர் BMJ 0191-30 குதிரை வலு

[கழற்றப்பட்ட நிலையில்]

இவற்றை தனித்தனியாக ஏலத்தில் விற்பதற்கும் சூழ்நிலையைப் பொறுத்து ஒழுங்குகள் செய்யப்படும். பார்வையிட விரும்புவோர் முன் அறிவித்தலுடன் மக்கள் வங்கியின் பிரதான வீதிக்கிளை முகாமையாளரைச் சந்தித்து இவற்றைப் பார்வையிடலாம்.

முகாமையாளர்
மக்கள் வங்கி
பிரதானவீதி, யாழ்ப்பாணம்

3017

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ காளி கோவில்
(டொற்பதி வீதி, பழைய காளி கோவில்)

ஸ்ரீ சிவபாலயோகியாரின்
முன்னிலையில் நடைபெறும்

## சண்டி ஹோமம்

5-5-82 புதன் மாலை 4-00 மணி — கோண்டாவில் பலாலி வீதி அற்புத நர்த்தன விநாயகர் ஆலயத்திலிருந்து யோகியார் ஸ்ரீ காளி கோவிலுக்கு ஊர்வலமாக அழைத்துச்செல்லப்படுவார்.

6-5-82 பகல் 9-00 மணி பூர்வாங்க கிரியைகள்.
வியாழன் மாலை 6-00 மணி சப்தசதி பாராயணம்.

7-5-82 காலை 6-00 மணி முதல் சண்டி ஹோமம்.
வெள்ளி பகல் 11-00 மணி யோகியார் மகாபூர்ணுகுதி சமர்ப்பிப்பார்.
மாலை 4-00 மணி முதல் யோகியாரின் தரிசனமும் தியான தீட்சையும்.

ஆலய வாசலிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இரவு போக்குவரத்து வசதி உண்டு. (3083)

ரி. வி. பிரியர்களின் குறைகளை நிவர்த்திசெய்ய மங்களகரமான திறப்புவிழா

## NORTHERN T.V. CENTRE நோதேன் ரி.வி. சென்ரர்

வடஇலங்கையின் JVC ரி. வி. விற்பனையாளர்

158, மானிப்பாய் வீதி, (ஈழநாடு முன்பாக) யாழ்ப்பாணம். 3089

### மணிவாக்கு

புத்தகங்கள் மனிதர்களல்ல; இருந்தும் உயிரோடுள்ளன; அவை மனித ஞாபகார்த்தங்கள்; அவனுடைய மூன்னேற்ற விருப்பங்கள்; நிகழ்காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் உள்ள தொடர்பு; அவன் உபயோகப்படுத்தும் ஆயுதங்கள்.

— ஸ்டீபன்லின் சென்ட் பெனட்.

# நமது நோக்கு

## தயக்கமின்றி ஊழலை தீர்த்துக்கட்டு

கோடிக்கணக்கில் கடன்பட்டு நாட்டை விருத்திசெய்து ஏழை மக்களுக்கு ஈடேற்றம் காண முயன்று நாம் கண்டதென்ன? இன்று காண்பதென்ன?

அபிவிருத்திநிதி என்னும் மகாவலி பெருக்கெடுக்குது; 'அண்ணை பிடி தம்பி பிடி' இதுவே தருணம் என்று பெருஞ்சுருக்கள், அரசாங்க சுருக்கள் பல வழிகளிலும், இப் பெருநிதியைச் சூறையாடி நாட்டைக் குட்டிச் சுவராக்கும் நாடகம் கபடமாகத் திரைக்குள் நடந்து வந்திருக்கிறது; இது நீண்டகால சரித்திரம்போலிருக்கிறது.

பலநாட் களவு ஒருநாள் வெளிவரும் என்றதுபோல், தற்சமயம் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின்கையில், விவசாய அபிவிருத்திக்கும் ஆராய்ச்சிக்கும் பொறுப்பான அமைச்சில் இடம் பெற்ற பாரிய ஊழற் பிரச்சினையின் முடிவு வெளிவரக் காத்திருக்கிறது.

நாட்டின் அபிவிருத்திக்கு அச்சாணி விவசாயத்துறை; உணவில்லாது வாழும் ஏழைகளுக்கும் போதிய உடை, கல்வியில்லாது தவிக்கும் லட்சக்கணக்கான வறியவர்க்கும் இந்த அமைச்சே புகலிடமாகக் கருதப்பட்டுவருகிறது!

நடந்ததென்ன? மக்கள் அறிய ஆவலாயிருக்கும் உண்மையை எவ்வித தயக்கமுமின்றி வெளிப்படுத்துக.

பெரிய நாடகங்களின் கதாநாயகர்கள் - அமைச்சர்கள் அமைச்சின் பேரதிகாரிகள், எம். பிக்கள் இவர்கள்போன்றமாபெரும் அரசாங்க ஆஷாடபூதிகளின் அக்கிரமங்கள் எவ்வித பூச்சுமெழுக்குமின்றி உள்ளவாறு வெளிப்படுத்தப்படவேண்டும். மக்கள் காத்திருக்கின்றனர்.

சுதந்திரநாட்டின் நீண்டகால வாழ்வில் ஆரம்பமாகி இன்று புற்றுநோய்போல் பீடித்திருக்கும் ஊழல் மோசடி நாம் நேற்று இப்பத்தியில் கண்டித்திருந்த கடன்பட்டவாழ்வின்நெருக்கடியை பன்மடங்கு அதிகரிக்கும்.

அதற்கு மேலாக நீடித்து வரும் ஊழல் ஆட்சியை ஒழிக்கவல்ல ஒழுக்கநெறியாளர் கூட்டம் ஆட்சியில் இல்லை என்ற முடிவுக்கு மக்கள் வர இடமுண்டு.

இன்று நடைபெறும் மந்திரிசபை ஆட்சி முறையை நுணுகிக் கவனித்தால், ஜனாதிபதி ஜெயவர்த்தன ஒருவரிலே முழுப்பொறுப்பும் தங்கியிருக்கிறதாகத் தோன்றுகின்றது.

அமைச்சர்களை அரசாங்க எம். பி. களை உயர் அதிகாரிகளைச்சேர்ந்த குற்றங்களை வெளிப்படுத்துவதில் மந்திரிசபை பின்னிற்பது பெரும் ஏமாற்றமளிக்கும் நிலையாகும்.

ஒரு மாசற்ற ஆட்சியை ஸ்திரப்படுத்தும் பணியில் தம்மை அர்ப்பணிக்க ஆயத்தமாயிருக்கும் ஜனாதிபதிக்கு அவசிய உதவியை பக்கபலத்தை அமைச்சர் அவை உதவ முன்வந்தால் இன்றைய மோசநிலை ஒரு சடுதியான மாற்றம் காணமுடியும்.

பெரும் புள்ளிகள் தண்டனைக்குள்ளாவதை அவர்களின் ஆதரவாளர்கள், செல்வாக்குள்ள கபடசமூகம் விரும்பமாட்டாது. அரசியல் ஆதரவை மறுக்கவும் முயற்சி செய்யும்; ஆனல் நாட்டின் நல்லாட்சி பொதுமக்களின் ஏகோபித்த நம்பிக்கையில் பெரிதும் தங்கியுள்ளது. இதனை மறுத்தல் ஆகாது.

வாயைக்கட்டி, வயிற்றைக்கட்டி, கந்தை உடுத்து கடுவழி நடந்து, வெயிலையும் மழையையும் பொருட்படுத்தாது கடின வாழ்வு வாழும்நாட்டின் ஜனத்தொகையின் அரைவாசிக்கு மேற்பட்ட ஏழைமக்கள் இச் சிறுதொகையினரான செல்வச் செருக்கிலும், ஏழைமக்களின் இரத்தத்தில் அலங்கார வாழ்வு வாழும் மானிடமிருகங்களை தூசென மதியார்.

இந்த நம்பிக்கைகொண்டு ஜனாதிபதி ஜெயவர்த்தன எந்தச் சந்தர்ப்பவாதியின் துர்புத்தி மதிக்கு செவிசாய்க்காது தமது சுயசிந்தனையின் பலத்தில் ஒரு புரட்சிகரமான மாற்றத்தைக் கொண்டுவரத் துணிய வேண்டும்!

ஜனாதிபதி ஒருவரே இப் பாரிய விடயத்தில் துணிவான நடவடிக்கை எடுக்க வல்லவரென்று மற்றவர்கள் ஒதுங்கி நிற்பது நற்பயன் அளிக்காது.

ஒன்று இவ்வித மனப்போக்கு அமைச்சரவையின் ஆட்சி அதிகாரத்தை பலவீனப்படுத்தவல்லது. கூட்டுப் பொறுப்புணர்ச்சியே பாராளுமன்ற ஆட்சியின் அத்திபாரக்கல்: அதனைக் கைவிடத் தொடங்கினல் அது ஒரு தனிநபரின் ஆட்சியாக மாற நேரிடும்.

இரண்டு; இது ஊழல்கள் மோசமாகப்பரவிய நிலையை மறைமுகமாக விளக்கும் செயல் போலாகும். ஊழல்பற்றி வெளியாக மனந்திறந்துகண்டிக்கும் மனஉறுதி அமைச்சரவையில் இல்லையென்று கருதப்படும்.

முழுப் பொறுப்பையும் ஜனாதிபதி அவர்களின் தலையில் சூட்டிவிடுதால் இந் தப்பாரதூரமான விடயத்தின் விளைவை அவரே தமக்கேற்றவாறு சமாளித்துக் கொள்ளட்டும் என்ற கருத்தும் தென்படும்.

சகாக்களை சிநேகிதர்களைக் காட்டிக் கொடுக்க வேண்டிய சந்தர்ப்பம் மனவேதனையான சங்கட நிலை நிச்சயம்ஏற்படும், அதற்கு மூடி மறைக்கும் ராஜதந்திரம் மருந்தானல் நாடு வியாதியடையும் தனிப்பட்ட உணர்ச்சிகளை தவிர்த்து நாட்டின் நலின நோக்கினை மக்கள் விசுவாசம் அருகிவரும் ஆட்சிக்கு ஒரு புதிய மதிப்பு ஏற்படும்.

எவ்வகையில் பார்த்தாலும் இன்று ஆரம்பமான 'லஞ்சஒழிப்பு' வெறும் கண் துடைப்பாகாமல் தேங்கிக்கிடக்கும் குளத்தை கலக்கி இறைக்கும் பெருஞ் சாதனையாக முடிவுறவேண்டும்.

# சுதேசியக் கல்விமுறை

பராபவ வருஷம் ஆவணி மாதம் 3ந் திகதி.

ஆகஸ்ட் மாதம் 18ந் திகதி 1906.

அந்நிய பாஷைகள் மூலம் கல்வி கற்பதனல் அநேக இளைஞர்கள் இளம் வயதிலேயே இறந்து விடுகின்றனர் என்று மஹரிஷி ரானடே கருத்துத் தெரிவித்திருந்தார். இதுபற்றி பாரதியார் எழுதிய குறிப்புப் பின்வருமாறு:

நமது இளைஞர்கள் இறந்து போய் விடுவதற்கு முக்கிய காரணங்களிலொன்று அந்நிய பாஷையில் தேறும்படி ஏற்பட்டிருப்பதேயாகுமென்று காலஞ் சென்ற மஹரிஷி ரானடே சித்தாந்தஞ் செய்திருக்கிறார்.

**ச. அம்பிகைபாகன்**

அந்நிய அரசாங்கமாகவிருப்பதால் ஆங்கில பாஷையிலே நம்மவர் தேர்ச்சி பெறவேண்டுமென்பதை நாம் மறுத்துப் பேசவில்லை. ஆனல் பூலோக சாத்திரம், உலக சாத்திரம், ரஸாயன சாத்திரம், வான சாத்திரம், கணிதம் என்பனவற்றைச் சுதேச பாஷைகளில் கற்றறிந்து கொள்ளுதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இதனல் இளைஞர்களுக்கு சிரமம் குறையும். சுயத்தன்மையும் ஏற்படக்கூடும். மெட்ரிகுலேசன் பரீட்ஷை வரை ஒவ்வொரு வகுப்பிலும் இங்கிலிஷ் பாஷை பயிற்ற வேண்டியது. அவன் பயிலும் மற்றைய பாடங்களைக்கூட தேச பாஷையில் நடத்தவேண்டும். இப்போது கல்கத்தாவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சுதேசிய கல்விச் சங்கத்தாரும் இதே நோக்கத்தைக் கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

### மதுரைத் தமிழ்ச் சங்கம்


இதே விஷயத்தைத் தொடர்ந்து மதுரைத் தமிழ்ச் சங்கம் பற்றிய கட்டுரையிலும் குறிப்பிட்டுள்ளார். அதைக் கீழ்க்காண்க: தமிழ்ச் சங்கங்களின் முக்கியத்தன்மைபற்றி முன்னொரு முறை எழுதியிருக்கிறேன். இப்போது ரங்கூனிலே மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் கிளையாக ஒரு சங்கம் ஏற்படப்போகிறதென்று தெரிந்து அந்த விஷயத்தைப் பற்றி மறுபடியும் பிரஸ்தாபிக்க இடமுண்டாகிறது. மூலைக்கு மூலை தமிழ்ச் சங்கத்தின் கிளைகள் ஏற்படுவது நமக்கு சந்தோஷமே. ஆனல் தாய்ச் சங்கத்தை அபிவிருத்திக்குக் கொண்டுவராமல், கிளைகளை மட்டும் அதிகமாக்கி என்ன பிரயோஜனமிருக்கிறது மிஸ்டர் பாண்டித்துரைத் தேவர் அவர்களும் பிறரும் மதுரையிலே தமிழ்ச் சங்கம் ஸ்தாபிக்க வேண்டுமென்று யோசித்தது மிகவும் நேர்த்தியான யோசனை. ஆனல், அது மேற்படி கனவானுடைய முயற்சியால் ஒருவாறு ஜீவித்து வருகிறதேயல்லாமல் நாள் தோறும் பெருமையாலும் உபயோகத் தன்மையாலும் தழைத்தோங்கி வருகிறதென்று சொல்ல இடமில்லை மதுரைச் சங்கம் ஒரு தமிழ் யூனிவர்சிட்டியாக வளர்ச்சி பெற வேண்டியதே நமது நோக்கம் அதற்கு ஸயன்ஸ் பகுதி, சரித்திர ஆராய்ச்சி பகுதி கணிதப்பகுதி முதலிய எத்தனையோபகுதிகள் ஏற்பட வேண்டும்.

நவீன பரிசோதனைகளையும் மற்றுமுள்ள சாஸ்திர அற்புதங்களையும் தமிழர்களுக்கு தமிழ்ப் பாஷையிலேயே கற்பிக்கக்கூடிய பண்டிதர்களும் கருவிகளும் வேண்டும். தமிழ்ப் பாஷை ஆராய்ச்சி செய்தால் மட்டும் போதாது. தமிழ்ப் பாஷையை எல்லாவகையாலும் பெருமைப்படுத்தி தமிழர்களின் அறிவுக்கு மேற்படிசங்கம் ஒரு மூல ஸ்தானமாக விளங்குவதற்குரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஆனல் இதுவெல்லாம் பணமில்லாமல் அணுவேனும் நடக்கமாட்டாது. பணம் முக்கியமாக வேண்டும். பிறகு பெரும் காரியங்கள் மேல்வகித்து நடத்தக்கூடிய மஹா சாமார்த்தியமானவர்கள் வேண்டும். இவ் விஷயத்தில் கல்வியும் அபிவிருத்தி அபிமானமும், செல்வமும் கொண்ட எல்லாத் தமிழர்களும் சிரத்தையெடுக்க வேண்டுமென்று விரும்புகிறோம்.

### குறிப்பு

பாரதியார் 75 ஆண்டுகளுக்கு முன் கண்ட கனவு இப்பொழுதுதான் நனவாகிறது. விஞ்ஞானம், மருத்துவம், பொறியியல், சித்த வைத்தியம், கட்டடக்கலை முதலியவற்றை தமிழால் போதிப்பதற்கு வேண்டியவற்றை செய்வதற்கென்றே சென்ற செப்டம்பர் 15ந் திகதி தமிழ் நாட்டு அரசாங்கம் ஒரு தமிழ் பல்கலைக் கழகத்தை தஞ்சாவூரில் நிறுவியுள்ளது. வி. ஐ. சுப்பிரமணியம் என்னும் பேரறிஞர் இதற்குத் துணை வேந்தராக நியமிக்கப்பட்டுள்ளர். அரசாங்கம் போதிய பணமும் ஒதுக்கியுள்ளது. சமீபத்தில் மருத்துவத்தை தமிழில் போதிப்பதுபற்றி ஒரு கருத்தரங்கு அங்கு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

# 'யாழ்ப்பாணத்து பிற்கால சுவர்ச் சித்திரங்கள்'



இன்று கலைத்தாய் மிகப் பெருமை கொள்ளும் வகையில் 38 ஆண்டுகள் கலைப்பணியாற்றிய கலாகேசரி திரு. ஆ. தம்பித்துரையின் 50 வது பிறந்த தினம் புத்தக வெளியீட்டுடன் மிகக் கோலாகலமாகக் கொண்டாடப்படுகின்றது.

யாழ். நுண்கலைக் கழகம் கழகக் காப்பாளர் வட மாநிலவித்தியாதிபதி திரு. க. சிவநாதன் தலைமையில் பிற்பகல் 4–30 மணியளவில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் இவ் விழாவினைக் கொண்டாடுகின்றது.

யாழ். பல்கலைக் கழகப்பேராசிரியர் திரு. கே. இந்திரபாலா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிக்கின்றார்கள். பேரறிஞர்கள் பலர் பாராட்டுரைவழங்குகின்றனர். ஈழத்திருநாட்டின் தலைசிறந்த கலைஞர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு கலாகேசரியின் கலைத்தொண்டிற்கும் திறமைக்கும் மதிப்புக்கொடுக்கின்றனர்.

**நா. க. தங்கரத்தினம்**

இந்தப் பெருவிழாவை முன்னிட்டு கலாகேசரி 38 ஆண்டுகள் செய்த கலைத்தொண்டினையும் அவர் தம் [illegible]மைகளையும் ஆராய்தல் பொருத்தமுடையதேயாகும்!

யாழ்ப்பாண பிரதேசசித்திர வித்தியாதரிசியாக இருக்கும் கலாகேசரி ஆ. தம்பித்துரை 5–5–1932 ல் பிறந்தவர். திருநெல்வேலி சிற்பாசிரியர் திரு வி. ஆறுமுகத்தின் புத்திரரான இவர், திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், குரும்பசிட்டியை வசிப்பிடமாகவும் கொண்டவர். பன்னிரண்டாவது வயதிலேயே கலைத்துறையில் ஈடுபட்ட இவர் கல்வி கற்பதோடு சிற்பம், சித்திரம், நடனம் முதலானகலைகளையும் தேர்ச்சிபெற்ற கலைஞர்களிடமிருந்து கற்றுக் கொண்டவர்.

கோப்பாய் வின்சர் ஆட்கிளப் மூலம் சித்திரக்கலையை வளர்த்து வந்த சித்திர வித்தியாதரிசி எஸ். ஆர். கனகசபையிடம் சித்திர பாடத்தைக்கற்றுக் கொண்ட கலாகேசரி தம்பித்துரை 1954 ம ஆண்டு ஆங்கில சித்திர ஆசிரிய தராதரப்பத்திரம் பெற்றவர். 1955 தொடக்கம் 1967 வரை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் சித்திர ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் 1968 தொடக்கம் இன்றுவரை வடமாகாண சித்திர வித்தியாதரிசியாகக் கடமையாற்றி வருகின்றார்.

ஈழத்திலே முதன் முதலாக வட்டத்தேர் மரபினை (வேசர மரபு)த் தொடக்கிய பெருமைக்குரிய இவர் தற்போது அறுகோணத் தேர் ஒன்றினை கொக்குவில் சிவசுப்பிரமணிய சுவாமி கோவிலில் செய்து கொண்டிருக்கிறார். தேர், ரதம், வாகனம், சிற்பம், கைப்பிரம்பு முதலானவற்றை மரபு தவறாது புதிய பாணிகளில் புதுமையான கற்பனைகளுடன் செய்யும் ஆற்றல் வாய்ந்த இவர், கொக்குவில் நந்தாவில் மனோன்மணியம்பாள் தேர் செய்த சிறப்பினலேயே அவ் ஊரவர்களது வேண்டுகோளுக்கிணங்க 'கலாகேசரி' என்னும் பட்டத்தைப் பெற்றார். முன்னாள் காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ம. ஸ்ரீகாந்தா 'கலாகேசரி' என்னும் பட்டத்தைச் சூட்டினர்.

பிரபல வியாகரண மகோபாத்தியாயர் சீதாராம சாஸ்திரிகளிடம் சமஸ்கிருதத்தை முறையாகக் கற்றுக் கொண்டு சிற்பசாஸ்திர நூல்களை வாசித்து விளங்கியதனல் சிறந்த சிற்பங்களை சிறந்த முறையில் செய்து வருகின்றார். இவரது தேர்களில், ரதங்களில் சிற்பங்கள் பல இடம் பெற்றிருப்பதோடு சிங்கப்பூரிலுள்ள சப்பரம் ஒன்றிலும் இவரது கைவண்ணம் நிறைந்த சிற்பங்கள் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

நல்ல கலைஞர்களைப் போற்றும் சுபாவமுள்ள இவர், அதிகம் பேசாதவர். அடக்கமே உருவானவர். சித்திரம் சம்பந்தமான ஐந்து நூல்களை முன்னரே எழுதியுள்ளார். இன்று இவரால் ஆக்கப்பெற்ற ''யாழ்ப்பாணத்துப் பிற்காலச் சுவர்ச்சித்திரங்கள்'' என்னும் நூல் வெளியிடப்படுகிறது.

# 500 ஆர்ஜென்டீனு வீரர்கள் பலி!

## சண்டை நீடிக்கிறது

லண்டன், மே 4

ஆர்ஜென்டீனுவின் இரண்டாவது பெரிய யுத்தக்கப்பலான 'ஜெனரல் பெல்கிரானே'வை பிரிட்டிஷ் விமானங்கள் குண்டுவீசித் தாக்கியதில் குறைந்தது 500 ஆர்ஜென்டீனு வீரர்களாவது மாண்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

13,645 தொன் எடையுள்ள இக் கப்பலில் சுமார் 1000 கடற்படைவீரர்கள் கடமையாற்றிக்கொண்டிருந்தனர் என்றும் பிரிட்டன் மேற்கொண்ட தாக்குதலையடுத்து உயிர்காப்புப் படகுகளில் இவர்கள் ஏறித் தப்பிச்சென்றுவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தாக்குதலுக்குள்ளான ஜெனரல் பெல்கிரானேவை நோக்கி ஏனைய சிறு ஆர்ஜன்டீனயுத்தப்படகுகள் விரைந்துகொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

போர்த் தகவல்களை வெளியிட்டுக்கொண்டிருக்கும் பிரிட்டிஷ் செய்தியாளர் ஒருவர் போக்லண்ட் யுத்தம் பற்றித் தெரிவிக்கையில், பிரிட்டனின் கரியர் விமானங்கள் இரு நாட்களுக்கு முதல் தமது போர்க்கப்பலொன்றைத் தாக்கவந்த ஆர்ஜன்டீனுவின் பிரெஞ்சுத் தயாரிப்பு 'மிராஜ்' விமானங்களைத் துரத்தியடித்தனவென்றும் அப்போது ஏற்பட்ட சமரில் ஒரு 'மிராஜ்' விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதுடன் வேறொரு போர் விமானம் சேதப்படுத்தப்பட்டதென்றும் தெரிவித்தார்.

பிரிட்டனின் போர் விமானங்கள் தாக்குதல்களை நடத்தியபின்னர் பத்திரமாக வந்து விமானந்தாங்கிக் கப்பல்களில் இறங்குகின்றனவென்றும், ஒரு விமானத்துக்கு மட்டுமே சிறு சேதமேற்பட்டுள்ளதாகவும் அவ் விமானமும் தற்போது திருத்தப்பட்டுவருவதாகவும் அறிவித்தார். (கி)

## ஆர்ஜென்டீனுவின்:
## கரையோரங்களும் தாக்கப்படலாம்?

### பிரிட்டனை எதிர்நோக்க ஆர்ஜென்டீனு டாங்கிகள் விரைவு!

புவனர்ஸ்அயர்ஸ், மே 4

போக்லண்ட் தீவுகளைச் சூழ்ந்திருக்கும் பிரிட்டிஷ் படைகள் ஆர்ஜன்டீனுவின் கரையோரங்களையும் தாக்கக்கூடுமென்ற அச்சம் தற்போது ஆர்ஜன்டீனு இராணுவத்துக்கு ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து ஆர்ஜென்டீனு இராணுவத்தின் இராட்சத டாங்கி வண்டிகளும், விமான எதிர்ப்புப் பீரங்கிகளும் ஆர்ஜென்டீனுவின் கரையோரப்பகுதிகளின் பிரதான நிலைகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அத்துடன் கரையோரப்பகுதிகளில் உள்ள விமானப்படைத் தளங்களையும் விழிப்பாக இருக்கும்படி இராணுவ உயர்பீடம் எச்சரித்துள்ளது.

கரையோரப்பகுதிகளில் வாழும் மக்களும் அவசியமேற்படும்பட்சத்தில் அப்பகுதிகளிலிருந்தும் வெளியேறத் தயாராக இருக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். சிலர் ஏற்கனவே அப்பகுதிகளிலிருந்தும் அகன்றுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. (கி)

## அமைச்சர் ஹமீத் நாடு திரும்பினர்

[கொழும்பு]

சோவியத் யூனியனில் 5நாள் விஜயத்தை மேற்கொண்ட வெளிநாட்டமைச்சர் ஜனுப் ஷாகுல் ஹமீத் நேற்று முன்தினம் நாடுதிரும்பினர்.

சோவியத் அதிபர் பிரஷ்னேவ் வெளியுறவு அமைச்சர் திரு குரேமிக்கோ ஆகியோருடன் அமைச்சர் ஹமீத் மூன்று தடவை பேச்சுவார்த்தை நடத்தினர்.

உலக சமாதானம் நிலவுவது பற்றிய கருத்துக்களும், இப் பேச்சுவார்த்தையில் இடம் பெற்றது.

மத்திய கிழக்கு பிரச்னையில் 1967ல் ஆக்கிரமித்துள்ள பகுதியிலிருந்து இஸ்ரேலிய துருப்புகள் வெளியேறினுல்தான் நியாயமான தீர்வு காணலாம் என ரஷ்யாவும் இலங்கையும் அறிவித்துள்ளன.

## ஆசியாக்காரருக்கு எதிராக பிரி. அரசின் நடவடிக்கை
### கம்யூ. (இடது) கட்சி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் ஆட்சியின் இனபாகுபாட்டுக் கொள்கைகளை எதிர்த்துப் போராடும் ஆசியக்காரர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி [இடது] கடுமையாகக் கண்டித்து இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் ஹைக்கமிஷனருக்கு மகஜர் அனுப்பியுள்ளது. கடந்த கோடைகாலத்தின்போது 30க்கும் மேற்பட்ட பிரிட்டிஷ் நகரங்களில் நடைபெற்ற கிளர்ச்சிகளையடுத்து 12 ஆசியக்காரர்களுக்கு எதிராக பிரிட்டிஷ் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரிட்டிஷ் வெடிமருந்து தடைச் சட்டத்தின்கீழ் சதிபுரிந்ததாகவும் குற்றம் புரிந்ததாகவும் இவர்கள்மீது விசாரணை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கைதாகியுள்ள 12 பிராட்போர்ட் இளைஞர்களின் நிலை பற்றி அரசு பதிலளிக்க முடியாதிருப்பதுடன் அவர்கள்மீது விசாரணையின்றி மேலும் அடக்குமுறை பிரயோகிக்கப்படுகின்றதென்றும், கைதாகியுள்ள 2ஆசிய இளைஞர்களும், அடக்குமுறைக்கு எதிராக பிரிட்டனில் குரலெழுப்பும் கறுப்பு இனத்தவரின் பிரதிநிதிகளென்றும், அவர்கள்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை வாபஸ் பெறப்பட்டு வழக்கு விசாரணைகளும் நிறுத்தப்படவேண்டுமென்பதும் மகஜரில் கோரப்பட்டுள்ளது. (கி)

## மருந்தென நினைத்து கிருமிநாசினி அருந்தினுராம்
### பெண் மரணம்

(மாவிட்டபுரம்)

மருந்தென நினைத்து கிருமிநாசினியை அருந்திய பெண்மணியொருவர் பரிதாபகரமாக மரணமானுர்.

மயிலிட்டியைச் சேர்ந்த குமாசாமி சிரோண்மணி அம்மா (48 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இம்மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராஜா விசாரணை நடத்தினுர்,

காலமானவருக்கு சுகவீனம் ஏற்பட்டு மருந்து வாங்கியிருந்தாகவும், வீட்டில் பூமரங்களுக்கு தெளிக்கும் கிருமிநாசினி இருந்ததாகவும், இரண்டும் ஒரே இடத்தில் இருந்த சமயம் மருந்தென நினைத்து கிருமிநாசினியை எடுத்து தவறுதலாக அருந்தியதாகவும் விசாரணையில் தெரியவந்தது.

விபத்துமரணமென மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

காங்கேசன்துறைப் பொலிசார் சாட்சிகளை ஆஜர்செய்துள்ளனர் (இ)

## காடுகளைப் பாதுகாக்க அமைச்சு நடவடிக்கை

[கொழும்பு]

மகாவலித் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுவரும் விக்டோரியா நீர்த்தேக்கத்தை அடுத்திருக்கும் 700 ஏக்கர் காணிகளில் உள்ள காடுகளைப் பாதுகாப்பதற்கும் அங்கு காட்டு வளத்தை விஸ்தரிக்கவும் காணி அபிவிருத்தி அமைச்சு முன்வந்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ்மேற்படி 700 ஏக்கர் நிலக் காடுகளையும் வனவிலங்குத்திணைக்களத்தின் உதவியுடன் பாதுகாப்பதோடு அப்பிரதேசத்தில் மேலும் காட்டுவளத்தை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விக்டோரியாப் பகுதியிலுள்ள மேலும் 500 ஏக்கர்காட்டு நிலத்தையும் பாதுகாப்பதற்காக அப்பகுதிகளிலுள்ள 50 பேரைத் தெரிவு செய்து அவர்களுக்கு காட்டு அபிவிருத்தி பற்றிய போதனைகளை இருவார காலத்துக்கு வழங்கவிருப்பதாகவும் இவ் 50 பேரும் தாம் பெற்ற பயிற்சிகளை தம் பகுதிமக்களுக்கு பின்னர் வழங்குவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

## இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் ஆர்ப்பாட்டம்!

சென்னை மே 4

சென்னை மாநகர கார்ப்பரேஷன் நிர்வாக சீர்கேடுக்கு கண்டனம் தெரிவிக்கும் ஆர்ப்பாட்டத்தை இந்திரா காங்கிரஸினர் நடத்தியதைத் தொடர்ந்து நூற்றுக்கு மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டனர்.

காந்தி காமராஜ் சிலையிலிருந்து கார்பரேசன் நோக்கி திரு. எஸ். கிருஷ்ணன் தலைமையில் புறப்பட்ட தொண்டர்கள் ஊர்வலமாகச் சென்று நகரில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்ததாக திரு. எம். கிருஷ்ணன், திரு. கே. பெருமாள், உட்பட நூற்றுக்கு மேற்பட்ட தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

10 ஆண்டுகளாக தேர்தலை நடத்தாமல் கார்ப்பரேசனில் சீர்கேடு ஏற்பட மாநில அரசு விட்டுள்ளது என ஊர்வலத்தில் தெரிவித்தனர். (க)

## ராமமூர்த்தி கமிஷன்

சென்னை மே 4

திருநெல்வேலி சங்கராகுளம் கிராமத்தில் 1980 ஏப்ரல் 19ம் திகதி ஆதி திராவிட பெண்கள் பலாத்காரம் செய்யப்பட்டது தொடர்பான ராமமூர்த்தி கமிஷன்அறிக்கை நேற்று அரசிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

## மீண்டும் ஈரான்-ஈராக் யுத்தம்!

பாக்தாத் மே, 4

ஈரான் ஈராக் நாடுகளுக்கிடையே நேற்றுமுன்தினம் கடும் யுத்தம் நடைபெற்றது.

இந்த யுத்தத்தில் ஈராக்கிய படைகள் தமது பிரதேசத்தினுள் ஊடுருவியிருந்த ஈரானியப் படைகளை பீரங்கிகளினதும், டாங்கிகளினதும்துணைகொண்டு விரட்டியடித்ததாசத் தெரிவிக்கப்பட்டது.

ஈரான் மேலும் ஈராக்கியப் பிரதேசத்தினுள் மேலும்முன்னேறி வருதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சமரில் இரு தரப்பும் பீரங்கி, டாங்கித் தாக்குதல்களில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இடையிடையே ஏவுகணைகளும் ஏவப்பட்டன. (கி)

## கருப்பட்டி, பனம்நாருக்கு அமெரிக்காவில் கிராக்கி!
### ரூ. 60 கோடி பனம் பொருள் ஏற்றுமதி

சென்னை மே 4

தமிழ் நாட்டிலிருந்து 34 நாடுகளுக்கு கடந்த ஆண்டில் 60 கோடி ரூபா பனம்பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது:

நடப்பு நிதியாண்டில் 80 கோடி ரூபா பெறுமதியான பனம்பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் என்று அமைச்சர் திரு. எஸ். இராஜேந்திரன் தெரிவித்தார்.

கருப்பட்டி. பனம்நார் அமெரிக்காவில் பெருமளவில் விற்பனை செய்யப்படுவதாகவும் அமெரிக்காவில் மக்கள் அவற்றைவிரும்பி வாங்குகிறுர்களென்றும்அவர்தெரிவித்தார்

இராமநாதபுரத்தில் பனம்பொருள் ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் அமைக்கப்படவிருக்கிறது. (க)

## ---கோவிலிலிருந்து திரும்பிய---
# அக்காவுக்கும் தம்பிக்கும் வாள் வெட்டு!

(வட்டக்கச்சி)

தேவாலய பூசைக்கு சென்று விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த இளம் பெண் ஒருவரும், அவரது தம்பியும் வாள் வெட்டுக்கு இலக்காகிப்பலத்த காயங்களுடன் அபாயகரமான நிலையில் யாழ்.அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வட்டக்கச்சியிலுள்ள தேவாலயம் ஒன்றில் பூசைக்குச் சென்ற மேற்படி இளம்பெண்ணை ரசிந்தா (26 வயது) வும் இவரது தம்பியான தேவராசா (16 வயது) வும் பூசை முடிந்து வீட்டிற்குதிரும்பிவந்துகொண்டிருக்கையில் உழவு யந்திரம் ஒன்றில் வந்த நான்கு பேர் அவர்களை வழிமறித்து தாக்கி, வாளால் வெட்டியதாகவும், பலத்த வெட்டுக்காயங்களுக்குள்ளான இருவரையும் உடனடியாக கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்று அனுமதித்ததாகவும் பின்னர் ஆபத்தான நிலையில் யாழ்.அரசினர் வைத்தியசாலையில் அம்புலன்ஸ் வண்டி மூலம் கொண்டு சென்று அனுமதித்ததாகவும் இதுபற்றிய பொலிஸ் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதல் சம்பவத்திற்கு காணித்தகராறே காரணம் என்றும் தெரியவந்துள்ளது. சந்தேகநபர்களைத்தேடி பொலிசார் வலை விரித்துள்ளனர். (வண்.நிருபர்) (இ)

## ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் ஆலய அலங்காரத் திருவிழா இன்று புதன்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும். தினமும் இரவு8மணி தொடக்கம் வண்ணை நீராவியடி பிரம்மஸ்ரீ சிவ. சுவ. நித்தியானந்த சர்மா ''சம்பூரண ராமாயணம்'' பற்றி தொடர் விரிவிரை நிகழ்த்துவார்.

## ஆட்சேப மனு

(கொழும்பு)

கலவான தேர்தல் ஆட்சேப மனுவழக்கில் நீதிபதி முன்னிலையில் இருதரப்பு வாதங்களும் நேற்று சமர்ப்பிக்கப்பட்டன.

பிரதிவாதிகளின் ஆட்சேபனைகள் 21ம் தேதி சமர்ப்பிக்க நீதிபதி கால அவகாசம் வழங்கினர். ஆட்சேபனை தொடர்பான விசாரணை ஜூன் 20ல் நடைபெறும் என்றும் நீதிபதி தெரிவித்தார்.

## திருக்காட்சி விழா

(கரவெட்டி)

பண்டத்தரிப்பு மத்தியா அன்னையின் வருடாந்த திருக்காட்சி விழா நேற்று மாலை ஆரம்பமானது. தினசரி திருப்பலிப் பூசையுடன் கொண்டாடப்படும் இவ்விழா 13ம் திகதி காலை யாழ். ஆயர் அதி. வந்.வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையினுல் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலிப் பூசையுடன் நிறைவுபெறும்.

## வைத்தீஸ்வரா சைக்கிளோட்டப் போட்டி

(யாழ்ப்மாணம்)

யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியின் ஓர் அம்சமான தூரசைக்கிள் ஓட்டப்போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 6-30மணிக்கு நடைபெறும்.

இப்போட்டிக்கு கல்லூரியின்பழைய மாணவரும், கல்லூரிஅபிவிருத்திச் சங்கஉபதலைவருமான திரு. எம். கே.இரத்தினவேற்பிள்ளை பிரதம விருந்தினராக கலந்து கொ ார். திருமதி இரத்தினவேற்பிள்ளை பரிசில் வழங்குவார்.

## ''தோல்வியையும் தாங்கிக்கொள் வேண்டும்''

(யாழ்ப்பாணம்)

''சனசமூகநிலையங்கள் பத்திரிகை படிக்கும் நிலையங்கள் போல இயங்காமல் சமூகத்திற்கு என்ன முன்னேற்றங்களைச் செய்யலாமோ அதனைச் செய்வதற்கு பின்னிற்கக் கூடாது. இதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன்தான் அரசாங்கம் தற்பொழுது சனசமூக நிலையங்களுக்கு வழங்கும் நிதியை இருமடங்காக கூட்டியுள்ளது. இதை நாம் நல்ல முறையில் பயன்படுத்தவேண்டும்.''

இவ்வாறு உடுவில் சங்குவேலி ஐக்கியவிளையாட்டுக் கழகம் சனசமூகநிலையத்தின் ஐந்தாவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு பேசுகையில் திரு, ஆர். சி. கணேசவேல் கூறினுர்.

சுன்னுகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுனேந்திரன் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட இவ்விழாவிற்கு திரு. ஞானப்பிரகாசம் தலைமைதாங்கினுர்.

இவ்விழாவில் திரு. கணேசவேல் தொடர்ந்து பேசியதாவது:

''இப்படியான விளையாட்டு விழாக்களில் பங்குபற்றுவதனுல் இளைஞர்கள் எதிர்காலத்தில் ஏற்படும் தோல்வியை தாங்கக்கூடிய மனப்போக்கு உடையவர்களாக தம்மை ஆக்கிக்கொள்ளமுடியும். வெற்றியையும் தோல்வியையும் சமமாக மதிக்கக்கூடிய ஒரு நிலையை இளைஞர்கள் உருவாக்கவேண்டும்.''

இறுதியாக கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.


## இலங்கை வங்கி காப்புறுதிச் சேமிப்புத் திட்டத்தில்

# 2% மேலதிகம்

## வேறு நன்மைகளும் வேறெந்தச் சேமிப்புக் கணக்கிலும் இல்லாதது

காரணம் இது ஒரு சாதாரண சேமிப்புக் கணக்கல்ல

இந்த விசேட சேமிப்புத் திட்டம், சாதாரண சேமிப்புக் கணக்குகளுக்கு வழங்கப்படும் வட்டியைவிட 2 % மேலதிகமாக வழங்குகிறது. அத்துடன் ரூ. 40, 000 /- வரையிலான ஆயுள் காப்புறுதியும் கிடைக்கிறது.

18 முதல் 55வயதுக்கிடைப்பட்ட எல்லா இலங்கைப் பிரஜைகளும் இதில் சேரலாம். ஆகக்குறைந்த வைப்புத் தொகை ரூ. 1000 /- அதன் பின்னர் 5 /- ரூபாவிலிருந்து அதற்கு மேற்பட்ட எந்தத் தொகையையும் வைப்புச் செய்யலாம். ஆகக் குறைந்தது 1000/- ரூபாவைக் கொண்டுள்ள தேசிய ஓய்வூதியக் கணக்குகளை வைத்திருப்போர், வங்கி உத்தியோகத்தர் ஒருவர் முன்னிலையில் உடல உறுதியுரை ஒன்றில் கையொப்பமிடுவதன் மூலம் இந்தத் திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

ஆயுள் காப்புறுதிக் கட்டணத்தை வங்கியே செலுத்தும். ஆகவே, கணக்கு வைத்திருப்பவருக்கு எந்தச் செலவுமில்லை, கணக்கினை ஆரம்பித்து ஒரு வருடம் முடிந்ததும் காப்புறுதி செயற்பட ஆரம்பிக்கும். கணக்கிலுள்ள மீதி1000/- ரூபாவுக்குக் குறையாமல் இருக்கும் பட்சத்தில் கணக்கு வைத்திருப்பவரின் 55 வது வயதைத் தொடர்ந்து வரும் ஆண்டுவரை செல்லுபடியாக இருக்கும்.

கணக்கு வைத்திருப்பவர் இறக்கும் போது அவரது நியமத்தர் அல்லது உரித்தாளர் ஆயுள் காப்புறுதி நன்மைகளைப் பெறுவார். கணக்கு வைத்திருப்பவரின் வயது, கணக்கு பேணப்பட்ட காலம் ஆகியவற்றைப் பொறுத்து, காப்புறுதி செய்யப்பட்ட தொகையின் 25% - 200% வரையிலான பணத்தைப் பெறலாம். கணக்கிலுள்ள மீதிப்பணத்திற்கு மேலாக காப்புறுதிக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

இத்திட்டம் பற்றிய முழு விபரங்களையும் தரும் இலவச வெளியீட்டினைப் பெற இலங்கை வங்கியின் ஏதாவதொரு கிளை முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

காப்புறுதி செய்யப்பட்ட சேமிப்புக் கணக்கு மேலதிக நன்மைகளைத் தருவதால் சாதாரண சேமிப்புக் கணக்கினை ஏன் வைத்திருக்க வேண்டும்.

BANK OF CEYLON

# இலங்கை வங்கி

----காங்கேசன் கொள்ளை----

# சந்தேகநபர்களில் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைக் கொள்ளை சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் சந்தேக நபர்கள் இருவரில் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்.

காங்கேசன்துறை குரு வீதியில் இராசநாயகம் நாகம்மா என்பவரது வீட்டினுள் புகுந்து கத்தியைக்காட்டி பயமுறுத்தி மேற்படி வயோதிப மாதை கட்டிவைத்து அங்கிருந்த 38 ஆயிரத்து 300ரூபா பெறுமதியான நகை, பணம் ஆகியனவற்றை இருவர் கொள்ளையடித்துச் சென்றிருந்தனர்.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதான யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மீராசாகிப் நஸீர், நயினு முகம்மது நிப்பால் ஆகிய இருவரும் றிமாண்டில் வைக்கப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்குட் படுத்தப்பட்ட சமயம் முதலாவது நபர் அடையாளம் காணப்பட்டார்.

நீதிபதி திரு. சீ. விக்னேஸ்வரன் இந்தநபரை தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறும், மற்றைய நபரை 2000 ரூபா உறுதிப்பிணையில் செல்லுமாறும் உத்தரவிட்டார்.

### இருவர் அடையாளம் காணப்பட்டனர்

கொல்லங்கலட்டியில் இரவு நேரம் உறக்கத்திலிருந்த செல்லப்பா மாமாங்கம் என்னும் பெண்மணியின் 4500 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை அறுத்துச் சென்றதாக கூறப்படும் சம்பவம் தொடர்பாகவும் மல்லாகம் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பு இடம்பெற்றது.

எஸ். சச்சிதானந்தம், எஸ். யோகராஜா ஆகிய சந்தேக நபர்கள் அடையாள அணிவகுப்புக்குட்படுத்தப் பட்டனர். 3 சாட்சிகளில் ஒரு சாட்சி இருவரையும் அடையாளம் காட்டினர்.

சந்தேகநபர்கள் 5000 ரூபா உறுதிப்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

## ரூ. 85 ஆயிரம் ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பட்டினப் பகுதியில் மின்சார விஸ்தரிப்பு செய்வதற்காக இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் 85 ஆயிரம் ரூபாவை வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு ஒதுக்கீடு செய்துள்ளார். அத்துடன் முல்லையடி வீதியிலிருந்து சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு செல்லும் வீதியை புனரமைப்புச் செய்வதற்கும் திரு. திருநாவுக்கரசு பத்தாயிரம் ரூபாவை இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்துள்ளார்.

(இ)

## நுணசை முருகமூர்த்தி தேர்

(மாவிட்டபுரம்)

மாதகல் நுணசை முருகமூர்த்தி கோவில் இரதோற்சவ விழா நாளை நடைபெறுகிறது.

கடம்ப விருட்சத்துடனும், தாமரைத்தடாகத்துடனும் சிறப்புப்பெற்று விளங்கும் இவ்வாலயத்தில் இரதோற்சவ தினமான வியாழக்கிழமை ஏராளமான அடியார்கள் காவடி எடுத்து தமது நேர்த்தியை நிறைவேற்றுவார்கள்

பல பகுதிகளிலிருந்தும்இங்கு கூடும் அடியார்களுக்கு அன்னதானம், தாகசாந்தி வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

நண்பகல் 1 மணிக்கு முருகப்பெருமான் தேரில் ஆரோகணித்து வீதிவலம் வருவார்.

(இ)

## தமிழிசை விழா 7-ம் திகதி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் 24-வது ஆண்டுத் தமிழிசை விழா இம்மாதம் 7ம் திகதி வெள்ளிக்கிழமை நல்லூரில் ஆரம்பமாகிறது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் 10 தினங்கள் தொடர்ந்து நடைபெறும் இவ்விசை விழாவில் சங்கீத பூஷணம் அ. சோமசுந்தரம் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார். நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. செ. சபாபதிப்பிள்ளை, தொழிலதிபர் திரு. ஆர். ஜே. குணரத்தினம் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்து கொள்வர்.

## யாழ். நகரில் இஸ்லாமிய மகாநாடு

[யாழ்ப்பாணம்)

யாழ். தப்லீக்ஜமா அத் இஜ்திமா (இஸ்லாமிய மகாநாடு) இம்மாதம் 7ம் திகதி வெள்ளிக்கிழமை [பொம்மைவெளி முஸ்லிம் குடியேற்றத் திட்டத்தில் அமைந்திருக்கும் அல் மதுரஸததுஸ் ஸலாமியா குர் ஆன் பாடசாலையில் நடைபெறுகிறது.

முதல் தடவையாக நடைபெறும் இம்மகாநாட்டில் காலை 6 மணி முதல் இரவு 11 மணிவரை நிகழ்ச்சிகள் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

(இ)

## சுவாமி ஸ்ரீசிவபால யோகியின் யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

சுவாமி ஸ்ரீ சிவபாலயோகிகள் நான்குநாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று புதன் கிழமை யாழ்ப்பாணம் வருகின்றார்.

சுவாமிகளுக்கு இன்று மாலை கோண்டாவில் பலாலி வீதி அற்புத விநாயகர் ஆலயத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டு அங்கிருந்து ஊர்வலமாக கோண்டாவில் ஸ்ரீ காளி கோவிலுக்கு சுவாமிகள் அழைத்துச் செல்லப்படுவர்.

நாளை பகல் கொக்குவில் இந்துக்கல்லூரியிலும், மாலை சித்தன்கேணி ஸ்ரீ சிவசிதம்பரேசர் ஆலயத்திலும் சுவாமிகள் தரிசனமளிப்பார்.

வெள்ளிக்கிழமை பகல் பதினொருமணிக்கு கோண்டாவில் ஸ்ரீ காளி கோவிலில் சண்டிஹோம மகாபூர்ணாகுதி நடைபெறவிருக்கின்றது. அன்று மாலை மேற்படி ஆலயத்தில் சுவாமிகளின் தரிசனமும் தியான தீட்சையும் வழங்கப்படும்.

சனிக்கிழமை காலை கோண்டாவில் ஸ்ரீ ஆசிமட அரசடி விநாயகர் ஆலயத்தில் சுவாமிகளின் தரிசனம் இடம்பெறும்.

(இ)

சங்க மண்டபத்தில்

## நூல்நிலையத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இளைஞர் சங்கம்-மனோன்மணி சனசமூக நிலையம் மூப்பத்து ஏழாவது வருடாந்த கூட்டம் ஏழாம் திகதி வெள்ளிக்கிழமை சங்க மண்டபத்தில் நடைபெறும்.

புதிய நூல்நிலையத்தை, சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா சங்க மண்டபத்தில் திறந்துவைப்பார். இந்த நூல்நிலையத்துக்கு நிரந்தர நூலகர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்.

# அளவெட்டி வடக்கு-தெற்கு சமாதான சபை

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி வடக்குத் தெற்கு கிராமோதய சபைகள் இணைந்து நடாத்திய பகிரங்கக் கூட்டத்தில் அளவெட்டி வடக்குத் தெற்குப் பகுதிகளுக்காய சமாதான சபை தெரிவு செய்யப்பட்டது.

இக்கூட்டம் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா தலைமையில் நடைபெற்றது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் இக்கூட்டத்தில்பேசுகையில் கூறியதாவது:

பொலிஸ் பொதுமக்கள் தொடர்பு சபையைச் சுன்னாகம் பொலிஸ் பொறுப்பதிகாரி கலைத்தது இப்பகுதி மக்கள் மனதைப் பெரிதும்புண்படுத்தியிருக்கிறதென்பதை என்னால் உணரக்கூடியதாகஇருக்கிறது.

ஒரு பொலிஸ் பொறுப்பதிகாரிக்கும் பொலிஸ் பொதுமக்கள் நல்லெண்ணக்குழுவைக் கலைக்க அதிகாரமில்லை. எப்படியாயினும் எந்த அதிகாரியும் பொலிஸ் பொதுசன நல்லெண்ணம் வளர்வதற்குத் தடையாக இத்தகைய செயலைச்செய்திருக்கக்கூடாது. இது பொலிஸ் பொதுமக்கள் தொடர்பைப் பெரிதும் பாதிப்பதால் இச்சபைக்குரிய சட்ட திட்டங்களைப் பார்வையிட்டு அதன் பின் இதில் பாரபட்சமற்ற விசாரணை நடைபெறுவதற்கு ஆவனசெய்வேன்.

திரு. நடராசா பேசுகையில் பொலிஸ் பொதுமக்கள் தொடர்பு சபையின் அதிகாரம் பொதுமக்களிடமே இருக்கக் கூடியதாகச் சட்டம் அமையவேண்டுமெனக் குறிப்பிட்டார்.

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் தலைமையில் நடந்த சமாதான சபைத் தலைவர் தேர்தலில் திரு. ச. அப்பாத்துரை தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். இவர் கலைக்கப்பட்ட பொலிஸ் பொதுமக்கள் தொடர்பு சபையின் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. பத்துப்பேர்கொண்ட நிர்வாகக் குழுவொன்று புதிய தலைவர் தலைமையில் தெரிவுசெய்யப்பட்டது.

தலைவர் திரு. ச. அப்பாத்துரை (அளவெட்டி தெற்குக் கிராமோதய சபைத் தலைவர்), உபதலைவர்: பண்டிதர் க. நாகலிங்கம் (அளவெட்டி வடக்குக் கிராமோதய சபைத் தலைவர்),

காரியதரிசி திரு. த. கனகரத்தினம் (சுன்னாகம் ப. நோ. கூ. சங்க முன்னாள் செயலாளர்) உபகாரியதரிசி; திரு. க, செல்லையா (அளவெட்டி தெற்கு அ. மி. பாடசாலை அதிபர்), தனாதிகாரி: திரு. ச. பொன்னுத்துரை (இளைப்பாறிய தபாலதிபர்).




கீழ்க்காணும் மாடல்களைச் சேர்ந்த யமஹா மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் ஒரு விசேட யமஹா கைக்கடிகாரம் முற்றிலும் இலவசம். ஜப்பான், சிற்றிஸன் வாட்ச் கம்பெனி உற்பத்தி செய்யும் இந்த அசல் குவார்ட்ஸ் டிஜிற்றல் கடிகாரம். அலார்ம் / சவுண்ட் மொனிட்டர் / சைம் / லைட் / ஸ்ரொப் வாச் / உடனடியாகக் கையால் சீராக்கும் வசதி / தானாகவே சீராக்கும் காலண்டர் என்பன கொண்டது.

| மாடல் | | விலை |
|---|---|---|
| யமாஹா | V 80 | ரூபா 13,900/- |
| யமாஹா | YB 80 | ரூபா 14,400/- |
| யமாஹா | DX 100 | ரூபா 15,500/- |
| யமாஹா | DT 100 X | ரூபா 19,900/- |
| யமாஹா | RX 115 | ரூபா 21,400/- |
| யமாஹா | RS 125 E | ரூபா 19,700/- |
| யமாஹா | DT 175 | ரூபா 24,900/- |
| யமாஹா | XT 250 | ரூபா 28,950/- |
| யமாஹா | RD 350 LC | ரூபா 39,000/- |

உதிரிப்பாகங்கள் ஏராளம். தனிப்பட்ட பராமரிப்புச் சேவை.
த பிறைன்ஸ் கம்பனி ஊடாக நாடு முழுவதும் தவணைக்கட்டண வசதியுண்டு.
உத்தரவுபெற்ற சகல யமஹா வியாபாரிகளிடமும் கீழ்க்கண்ட முகவரியிலும் கிடைக்கும்:

ஏக விநியோகத்தர்கள்:
AMW
அசோஸியேட்டட் மோட்டார்வேய்ஸ் லிமிட்டெட்.,
185, யூனியன் பிளேஸ், கொழும்பு 2. தொலைபேசி: 33371-6
TEAM
YAMAHA

மூன்றுவது வாரம்
ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
தில்லுமுல்லு

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2.30,6 15 9.15
சுதாகர் – ராதிகா
சுவர் இல்லாத
சித்திரங்கள்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ராஜாவீட்டுப்
பிள்ளை
[புதிய பிரதி]

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
WILD
GEESE

சாந்தி (யாழ்நகர்) 10–30, 2–30, 6–15, 9–45
இந்தியாவிலிருந்து தருவித்த புதிய பிரதி
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
நாகேஷ்
முத்துச்சிப்பி
எதிர்பாருங்கள் கடல்மீன்கள் [கலர்]

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
2-வது மாதமாக
ஸ்ரீ பிரியா, சுபாசினி, கமல், ரஜனி, நாகேஷ்
இன்னும் பல நட்சத்திரங்கள் நடித்த
நட்சத்திரம்
(ஈஸ்ட்மன் கலர்)

RAJAH Daily at 10–30, 2–00, 4–30
7–00 and 9–30
(Jaffna) SHIRLY EATON
FUTURE WOMEN
(Strictly for Adults – Scope Color)
கண்டிப்பாக வயதுவந்தவர்களுக்கு

ராணி தினசரி 10–30, 2–00, 4–30,
7–00, 9–30
(யாழ். நகர்) இன்று மட்டும்
TARZAN THE
APE MAN
(ஈஸ்ட்மன் கலர்)

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 22ம் திகதி

புதன்கிழமை

(5—5—82)

மேடம்: எண்ணிய காரியத்தில் ஏமாற்றம் தென்படும் நண்பர்களின் தொல்லைகள் அதிகரிக்கும் தொழில் புரியும் இடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பேணவும்.

இடபம்: தக்க சமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும் தெய்வநம்பிக்கைமேலிடும் நினைத்ததைச் சாதிப்பீர்கள் இன்று முன்னிலையில் நிற்பீர்கள்.

மிதுனம்: பணம் தாராளமாகக்கிடைக்கும் சிலருக்கு அதிஷ்ட தேவதையின் அழைப்பும் கிடைக்கும் இன்று பெருமையான தினமாகும்.

கடகம்: கூட்டு வியாபாரத்தில் முன்னேற்றமும் உண்டு. வெளியூரில் இருந்து திருப்திகரமான செய்தியும் கிடைக்கலாம். கடமையில் ஆர்வம் பிறக்கும்.

சிங்கம்: பகைமூட்டம் வட்டமிடும் தொழில்துறையில் முட்டுக்கட்டை தோன்றக்கூடும் கடிதமொன்று கவலையைத் தரலாம்.

கன்னி: நீண்டநாள் சடன் இன்று நிவர்த்தியாக ஏமாற்றமும் அடைய நேரிடும் தொழில் துறையில் தொல்லைகள் தோன்றி மறையக்கூடும்.

துலாம்: பிரச்சினைகள் பல இன்று நல்ல முடிவைத்தரும் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும் மேலிடத்து ஆதரவும் தப்பாமல் கிட்டும்,

விருச்சிகம்: தூக்கம் விழிகளைத் தழுவக்கூடும் கடந்த கால எண்ணங்கள் அலைமோதும் அடுத்துக்கெடுப்பதற்குச் சிலர் முனைவார்கள்.

தனு: பந்தபாசம் உங்களை அவசரப்படுத்தும் உறவினர்கள் உற்சாகமான வரவேற்பைக்கொடுப்பார்கள் கல்வித்துறையில் அதிக ஈடுபாடு ஏற்படும்.

மகரம்: மற்றவர்களின் இன்னல்கண்டு இரக்கம் காட்டுவீர்கள் தாராளமான குணத்தின் மூலம் தனமும் செல்வாக்கும் பெருகும் சிலருக்கு நல்ல நாள்.

கும்பம்: சூழ்ச்சி வலை விரிக்கும் மனச்சாட்சிப்படி நடந்து கொள்ளவேண்டாம். சிலர் வாழ்க்கையில் வழக்கு விவகாரங்களிலும் செலவாகும்.

மீனம்: பிரிந்தவர் வாழ்க்கையில் இணைவார் குடும்பப் பிரச்சினைகளில் சுமூகமான நிலை தென்படும் வேண்டியதைச் சாதிக்கக்கூடிய செல்வாக்குப் பெருகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# பாரதி
## நூற்றாண்டுவிழா

(அரியாலை)

அரியாலை சிற்றம்பலம் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் பாரதி நூற்றாண்டுவிழா இம் மாதம் 8ம் திகதி சனிக்கிழமை மாம்பழம் சந்தியில் திருமதி பா. வேல்முருகு தலைமையில் நடைபெறவிருக்கிறது.

''பாரதி காட்டிய பாதை'' என்ற விடயம் குறித்து ஆசிரியர் சொக்கன் சிறப்புச்சொற்பொழிவு நிகழ்த்துவார். இசை நடன, நாடக நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

# மறக்கமுடியாத கருணைவள்ளல்

பிறந்தவர் இறப்பது இயற்கை. அதனைநாம் மறப்பதும் உண்மை. ஆனால் கருணைவள்ளலாகிய கல்வயல் தந்த தலைமை ஆசிரியர் கா. இராமுப்பிள்ளை அவர்களை மறக்கவும் முடியுமா? இன்று அவர் எம்மத்தியில் இல்லை; இதை இலகுவில் நம்மால் நம்ப முடியுதில்லை. சைவாசார சீலரான இவர் பெருங்குளத்துப் பிள்ளையார் கோயிலின் தருமகர்த்தாவாக இருந்து இத்தலத்தைச் செய்பமுற நிருவகித்த செம்மல்.

கல்வயல் சைவவித்தியாசாலையில் நெடுங்காலமாக தலைமையாசிரியராக விளங்கிச் சைவம் வளர்த்து வந்தவர். நெற்றியில் திருநீறு, காதில் வில்வம், முகத்தில் மறையாத புன்னகை– கருத்தில் திருவருட்தியானம். இவை அவரின் சொரூப லட்சணம் முகத்தில் கருணை பொங்கிவழியும். இவர் எல்லாருக்கும் நல்லவர்.

பழைமையைப் போற்றும் அவர்– பண்டிதமணி சி. க. இவர்களின் காவிய பாடசாலையில் முறையாக சைவசித்தாந்தம் பயின்றவர். தன்னுடைய தலைமை ஆசிரியப்பணியைத் திருக்கேதீஸ்வரத்திலுள்ள சைவவித்தியாலயத்திலும் நெடுங்காலம் புரிந்தவர். கேதீஸ்வரநாதனின் திருவருட் பார்வைக்கு இலக்காகி– சேர். கந்தையா வைத்திய நாதனுடன் கூடிச் சைவப்பணியும் சிவப்பணியும் புரிந்தவர்.

இளைப்பாறியபின் தன் மைந்தன் கவிஞன் முருகையனுடன் நீர்வேலியிற் தங்கி, கலியுகவரதனுகிய நீர்வேலிப் பன்னிரகையனை சேவித்து நிறைவு கண்டார்.

ஆசிரியமணி
ஆர். ரி. சுப்பிரமணியம்.

Regal Jaffna
Daily 10-30, 2-15, 4-30,
7-00 9-30
From 5th and 6th
BLACK
SUNDAY
(Suspense and Action)

யாழ். மனோகராவில்
இன்று முதல் குதூகல ஆரம்பம்
இந்தியாவில் 250 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றிவாகை சூடியதுடன்
வெள்ளி விழாவில் பரிசு பெற்ற சிறந்த காதல் காவியம்.
1981ம் ஆண்டின் சிறந்த நடிகர்கள் எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட
சினிமாத்துறையின் புது முகங்கள்.

கார்த்திக்
ராதா
தியாகராஜன்



இன்னும்
பலர்
திறம்பட
நடித்த

பாரதிராஜாவிற்கு திரைப்பட உலகில் ஒரு நிலையான இடத்தைப்
பெற்றுக்கொடுத்திருக்கும் காதல் காவியம் தான்
அலைகள் ஓய்வதில்லை
(கலர்)
காட்சி நேரங்கள் குறிப்பிடமுடியாதபடியால் ஆசனங்களுக்கு முந்துங்கள்.

# பிஸ்கால் விற்பனவு

## மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை

வழக்கு இலக்கம்: 14556
கணபதிப்பிள்ளை தாமோதரம்பிள்ளை, துன்னாலை வடக்கு
வழக்காளி

சீனியன் நாகமணி, துன்னாலை தெற்கு
எதிராளி

மேலே சொல்லப்பட்ட எதிராளி மேற்சொல்லப்பட்ட இலக்க வழக்கில் 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 6ம் திகதிய இக்கோட்டின் தீர்வையின் படி தீர்வைத் தொகை ரூபா 3863–45 வட்டி 10–7–78 — 6–10–78 வரை 106–05, 6–10–78—26–5–81 வரை 72?–00 மொத்தம் ரூபா 4689–50 சதம் மற்றும் கோட்டுசெலவுகளும். இதற்காக எதிரியினுடைய கீழே சொல்லப்பட்ட ஆதனங்களையும் பிரயோசனங்களையும் 1982ம் ஆண்டு ஆனி மாதம் 4ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் குறித்த ஆதனங்களில் நின்று என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் என இத்தால் அறியத் தருகின்றேன்.

### விற்பனை செய்யப்படும் ஆதனங்களின் அட்டவணை

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி கட்டைவேலிக் கோயில் பற்று துன்னாலை செகற்கொடி தேவன் குறிச்சியிறை வீட்டுத்திடல் நி பர. 2, 3/8, ஆனால் உலாந்தா மேஸ்தர் பீ. ஏரம்புவால் 1964ம் ஆண்டு ஆடி மாதம் 9ம் திகதி விந்தாரிக்கப்பட்டதும் குறித்த பிரிவிடல் தீர்வையோடு அணைக்கப்பட்டதுமான படத்தின்படி நிர. 2குளி 6, 14/32 இதில் குறித்த படத்தில் 24ம் நம்பர் துண்டுக்கு நிர. 1 குளி 13, 106/128 இதில் தெற்குப் பக்கமாக குளி 4½ இதற்குள் அமைந்த கிணற்றில் அரைவாசியும் பிற நீங்கலாக மிகுதிக்கு நி. பர. 1 குளி 9, 42 / 128 இதற்குக் கீழே குறித்த 2ம் ஆதனத்தில் இருந்து ஒழுங்கைக்குபோக்கு வரவு செய்வதற்கான வடக்குப்புறமாக உள்ள குளி 4½எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு, மேற்கு குறித்த படத்தில் குறிக்கப்பட்ட 16ம் நம்பர்த்துண்டு, மேற்கு நன்கொடை வாங்கற்காரனுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் தெற்கு எங்களில் 3ம் பேருக்கு சொந்தமான 2ம் நம்பர் துண்டு இதனடங்கலும்.

2. மேற்படி இறை வீட்டுத்திடல் நில பர. 8 குளி 6ல் வடக்கு, வடகிழக்குப்பக்கமாக நில பர. 0 குளி. 17 7/16 எல்லை கிழக்கு மேற்குறித்த போக்குவரவுக்கால், மேற்சொல்லிய 2ம் நம்பர்த்துண்டும் வடக்கு பரமன் பெண் செங்கமலத்திற்குரிய ஆதனம். மேற்கும் தெற்கும் எங்களில் 3ம்பேருக்கு உரிய ஆதனம் இவ்வெல்லைக்குட்பட்டவைகள் அடங்கலும்.

3. மேற்படி இறை ஆத்திஒல்லை நில. பர. 9, ¾ பனைகள் வடலிகள் தென்னைகள், புளி, மாவிலங்கைகள். கொட்டில் வீடுகளும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு நாகன் சீனியனுக்கும் மறுபேர்க்கும் உரியது. மேற்கு நாராயணபிள்ளை பெண் நாகரத்தினத்திற்கும் மறுபேருக்கும் உரிய ஆதனம். தெற்கு ஆழ்வான் கைம்பெண் கந்திக்கும் உரிய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்டவை யாவிலும் சொரியலாய் பதினாறில் மூன்று பங்கும் (3/16) கொட்டில் வீடுகளில் அரைவாசியும்.

க. செல்வராசா,
பிஸ்கால்,
மாவட்ட நீதிமன்றம், பருத்தித்துறை.

1982–4–22. 3077

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த மரணசாதன மின்றி காலஞ் சென்ற ஆ. கே. இரத்தினசபாபதியின் மரணச் சொத்துச் சம்பந்தமான விடயத்தில்

மரணமெய்தியவர்

இரத்தினசபாபதி கைம்பெண் நாகரத்தினம் உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்

மனுதார்.

இல. ரீ/3636

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் ஆஸ்தியை நிர்வகிப்பதற்காக மேலே சொல்லப்பட்ட இலக்கமுடைய வழக்கைத் தாக்கல் செய்து அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறியத் தரப்படுகின்றது.

இதில் அக்கறையுடைய எவரேனும் குறித்த பின்னுறதித் தீர்வையை ஏன் பூரணப்படுத் தப்படலாகாதென்பதற்கு தகுந்த காரணமிருப்பின் 1982ம் ஆண்டு ஆனி மாதம் 4ந் திகதி காலை 9–00 மணிக்கு இம் மன்றில் தோன்றி காண்பிக்குமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1982ம் ஆண்டு சித்திரை மாதம் 21ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

(ஒப்பம்)

தா. குலஞானம்
பதிவாளர்
யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்.

வரைவு
சி. சுரேந்திரன்
மனுதார் சட்டத்தரணி.
3027

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணம் அரசடி வீதி இல. 84/2 காலஞ் சென்ற ஆறுமுகம் நடராசா கைம்பெண் மனோன்மணி என்பவரின் மரண சாதன விடயத்தில்.

மரணமெய்தியவர்

மரணச்சொத்து
நியாயாதிக்கம் இல. 3650

யாழ்ப்பாணம் பிறவுன் வீதி இல. 43ம் தற்போது கொழும்புவெள்ளவத்தை இராஜசிங்கா வீதி இல.27 கலாநிதி நடராசா விக்னராசா

மனுதார்.

மேலேயுள்ள இலக்கங் கொண்டமரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்து போனவரின் மரணசொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப் படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982 ஆண்டு மே மாதம் 14ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப் பட்டபின்னுறுதிக்கட்டளையை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால்தேவைப் படுத்தப் படுகின்றார்.

1982–ம் ஆண்டு சித்திரை மாதம் 27.

நீதிமன்றத்தின் கட்டளைப்படி

தா. குலஞானம்.
(பதிவாளர்)
3045

## வெற்றுச் சாக்கு கேள்வி விளம்பரம்

கட்டைவேலி – நெல்லியடி ப. நோ. கூ. சங்கத்தில் 6000க்கு மேற்பட்ட சாக்குகள் கேள்வி மூலம் விற்பனைக்கு இருக்கின்றன. ரூபா 100/– மேற்படி சங்கத்தில் கட்டி கேள்வி பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளலாம். சீல் வைத்த கேள்விப் பத்திரங்கள் யாவும் 15–05–82 ந் திகதி சனிக் கிழமைக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் ''பொது முகாமையாளர், கட்டைவேலி நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி'' என்னும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கேள்விப் பத்திரம் அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வெற்றுச் சாக்குக்கான கேள்வி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

சோ. இராமலிங்கம்
பொதுமுகாமையாளர்,
கட்டைவேலி,
நெல்லியடி ப.நோ. கூ.சங்கம்.
கரவெட்டி,
29–04–82.

3040

க. சி. முத்துக்குமாரசாமி
மனுதாரின் சட்டத்தரணி

## பின்முற்றுக்கும் தீர்வையின் அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

மரணசாதனம் முடியாமல் காலம் சென்றவர் தில்லையம்பலம் முருகேச பிள்ளையின் சொத்துக்களின் விடயமாக.

தில்லையம்பலம் முருகேச பிள்ளை – வியாபாரிமூலை, பருத்தித்துறை.

— காலம் சென்றவர்.

முருகேசபிள்ளை கைம்பெண் செல்லாச்சியம்மா, வியாபாரிமூலை, பருத்தித்துறை.

— மனுதார்.

எதிராக

தத்துவ )
நியாயாதிக்கம்) இல. 1067

1. நல்லையா நிர்மலா
2. நல்லையா நிரஞ்சன்
3. நல்லையா கைம்பெண் மீனலோசனி
4. முருகேசபிள்ளை ஜெயதேவி
5. சச்சிதானந்தம் பெண் கமலாதேவி
6. சுந்தரலிங்கம் பெண் பரிமளாதேவி எல்லோரும் வியாபாரி மூலை, பருத்தித்துறை

— எதிர்மனுதார்கள்.

இத்தால் சகலருமறிக மேலே குறிப்பிட்ட இலக்க தத்துவ வழக்கு இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும் மேலே சொல்லிய காலம் சென்றவரின் சொத்துக்களை நிர்ணயிப்பதற்காக பின் முற்றுக்கும் தீர்வை பதியப்பட்டுள்ளது.

எனவே எவரேனும் இதில் அக்கறை உள்ளவர்கள் இந்த நீதிமன்றில் 1979–ம் ஆண்டு ஆனி மாதம் 1–ந் திகதி முற்பகல் 9 மணியளவில் மன்றில் சமூகம் கொடுத்து பின் முற்றுக்கும் தீர்வை முழுத்தீர்வையாக ஏன் பதியக் கூடாது என்பதற்கு ஏதேனும் காரணமிருப்பின் அவைகளை சமர்ப்பிக்குமாறு வேண்டப் படுகின்றீர்கள்.

1979–ம் ஆண்டு பங்குனி மாதம் 20–ந் திகதி.

மன்றின் கட்டளைப்படி

க. விஸ்வலிங்கம்
பதிவாளர்.

26 – 3 – 82

காரணம் காண்பிக்கும் தவணை 6–5–82 டிற்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மன்றின் கட்டளைப்படி
பதிவாளர்
3070

## கேள்வி விளம்பரம்

(1) யாழ்ப்பாணம் அபிவிருத்திச் சபை உப அலுவலகம், பண்டத்தரிப்பு பட்டணப் பொதுச் சந்தை மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நவீன சந்தையின் கீழ் மாடியிலிருக்கும் 1–14 கடைகளும் 1–6–1982ம் திகதி தொடக்கம் வாடகைக்குக் கொடுப்பதற்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 17–5–1982 நண்பகல் 12–00 மணி வரையும் சபையினுல் ஏற்றுக்கொள்ளப் படும். மேற்படி கேள்விகளுக்கான கேள்விப் பத்திரங்கள் இணைப் பிரதிகளில் யா/அ. ச. உப அலுவலகம், பண்டத் தரிப்புப் பட்டணசபையினுல் 14–5–1982 பி. ப. 2–00 மணி வரை கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/–யும் கேள்விப் பத்திரக் கிரயமாக ரூபா 25/–யும் செலுத்தும் ஒவ்வொருவருக்கும் வழங்கப் படும்.

(2) மேற்படி கடைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரே தடவையில் செலுத்தவேண்டிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை ரூபா 30,000/–க்குக் குறையக் கூடாது. மேலும் குறிப்பிட்ட கடைகள் ஒவ்வொன்றிற்கும் பிரதான விலை மதிப்பீட்டாளரால் நிர்ணயிக்கப்படும் மாதாந்த வாடகையுடன் ஒரே தடவையில் விற்பனை சம்பந்தமாகச் செலுத்தப்படவேண்டிய கூடுதலான கேள்வித் தொகையை யார் செலுத்துகிறுர்களோ, அவர்களுக்கே அக்கடைகள் வழங்கப்படும்.

(3) கேள்விகள் பதிவுத் தபால் மூலம், தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு, செயலாளர், யாழ். அபிவிருத்திச் சபை, யாழ்ப்பாணம் அவர்களுக்கு மூலப் பிரதியை அனுப்பும் அதேவேளையில் இணைப் பிரதியை அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர், யா. அ. க. உப அலுவலகம், பண்டத்தரிப்பு பட்டணம் என்று அனுப்பி வைத்தல்வேண்டும்.

மேற்படி கேள்வி விளம்பரத்திற்கான நிபந்தனைகள் யாவும், யா. அ. ச. உப அலுவலகம், பண்டத்தரிப்பு, பட்டணசபை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெறுக்கொள்ளலாம்.

மா. மயில்வாகனம்
நிர்வாக மேற்பார்வையாளர்,
யா. அ. ச. உப அலுவலகம்,
பண்டத்தரிப்பு பட்டணம்.

யா. அ. ச. உப அலுவலகம்,
பண்டத்தரிப்பு பட்டணம்,
29–4–1982 3071

(பண்டத்தரிப்பு)

மாதகல் பகுதி மீனவர்களின் நலன் கருதி மாதகல் துறைப் பகுதியில் எரிபொருள் நிலையம் ஒன்றை நிரந்தரமாக நிறுவுவதற்கு கடற்றெழில் அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா நடவடிக்கை மேற் கொண்டுள்ளார். (இ)

## சுன்னுகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரைவுள்ளது) சுன்னுகம் அறிவித்தல்

சுன்னுகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 4000ற்கு மேற்பட்ட வெற்றுச் சாக்குகளும், கழிவு சீனி, கழிவு மாவும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கிருக்கின்றன.

வெற்றுச்சாக்குகளுக்கு ரூபா 250/–உம், ஏனையவற்றிற்கு ரூபா 50/–உம் மீளளிப்பு வைப்புப் பணமாகச் சங்கத்தில் செலுத்திக் கேள்விப்பத்திரங்களைச் சங்கத்தின் வேலை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

12–5–1982 புதன்கிழமை நண்பகல் 12–00 மணி வரையும் கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்,

பொது முகாமையாளர்
3–5–1982 3078

## கோப்பாய் கிறீஸ்தவ கல்லூரி பழைய மாணவர் சங்கம் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 8–5–82 சனிக்கிழமை மாலை 5–00 மணிக்கு கல்லூரியில் நடைபெறும். பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன்அழைக்கிறோம்.

இங்ஙனம்
க. றமேஸ்குமார்,
செயலாளர்.
3034

## களஞ்சியப் பொறுப்பாளர் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனத்தின் விநியோக களஞ்சியத்திற்கு பொறுப்பாளர்தேவை. யாழ், நகரத்தில் அல்லது அண்மையிலுள்ள 55 வயதில் இளைப் பாறிய திறமையுள்ள அரசாங்க ஊழியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது. களஞ்சிய அனுபவம் விரும்பத்தக்கது. நியமிக்கப்படுபவர் பிணைப்பணம் கட்ட வேண்டும். மாத வேதனமாக ரூ. 600/– கொடுக்கப் படும். எழுத்து மூலம் மாத்திரமே தொடர்புகொள்ளலாம்.

விளம்பர இல: 0142
C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

### திரு. சே. தியாகராசா

தெல்லிப்பழை சே. தியாகராசா அவர்கள் (இளைப் பாறிய மாவட்ட பெரும்பாகவித்தியாதரிசி) சிவநாயகியின் அன்புக்கணவரும், சகிதேவி கந்தையா (இளைப் பாறிய ஆசிரியை இராமநாதன் கல்லூரி அவர்களின் தந்தையாரும், இ கந்தையா ஆங்கிலவிரிவுரையாளர் அவர்களின் மாமனுரும், கந்தகுமார், சக்திகுமார், யோககுமார் ஆகியோரின் பேரனுரும் சிவபதமடைந்துள்ளார். அன்னரின் ஈமக்கிரியைகள் செவ்வாய்க் கிழமை மாலை நடைபெற்றது.

சிவநிலையம், தெல்லிப்பழை.

3075

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

அளவெட்டி வடக்கு, தெல்லிப்பளை பண்டத்தரிப்பு றேட்டிலிருந்து சுமார் 300 யார் தூரத்தில் (ருல்மடம் றேட்) 12 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. தோட்டச் செய்கைக்கும், குடியிருப்புக்கும் ஏற்றது. தொடர்பு கொள்க K. P. அருணுசலம், ஈஸ்வரி வில்லா சிறுவிளான் இளவாலை. 304

J.V.C. வீடியோ றெக்கோடர் HR – 3660 EG Leader' L S G – 11 Signal Generator உடன் விற்பனைக்குண்டு ஸ்ரான்லி கோப்பறேசன், 79, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3062

ஸ்ருடியோ சகல உபகரணங்களுடனும் விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு. தொடர்பு:– கு. சி சுந்தரம் பிள்ளை திருவீதி, உரும்பராய். 3073

யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதியில் (மாநகரசபை எல்லைக்குள்] 4 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. மின்சாரம், தண்ணீர் மற்றும் வசதிகளுண்டு. விபரங்களுக்கு S. சிவலிங்கம், 6/12, மூத்த விநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 3069

மானிப்பாய் மேற்கில், மானிப்பாய்–காரைநகர் பிரதான வீதி அருகில் புதிதாகக் கட்டப்பட்ட நாலு அறைகள், தண்ணீர், மின்சாரம், மற்றும் சகல வசதிகள் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. செல்வராஜா, 'கற்பகவிலா' மானிப்பாய் மேற்கு. 3065

மானிப்பாய் மேதர்ஸ் ஒழுங்கையில் திரு. பத்மராஜாவுக்குச் சொந்தமான வெறும் காணியில் மூன்று பரப்பு விற்பனைக்குண்டு. தொடர்பு:– பி. பாலசுப்பிரமணியம், 15, அம்மன் கோவில்வீதி கிழக்கு. 3081

### தேவை

காய்ந்த, சுத்தமான இலுப்பைப் பூ தேவை. எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 191, (53) காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 3072

நன்ருய் வேலை செய்யக் கூடிய தொழிலாளிகள் உடனே தேவை. நேரில் வரவும். அரஸ்கோ, இன்டஸ்ரீஸ், 163, கண்டிவீதி, யாழ்ப்பாணம். 30 6

### வீடும்காணியும் விற்பனைக்கு

யாழ். கன்னுதிட்டி வீதியில் 4 பரப்புக் காணி, சகல வசதி கொண்ட வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

விளம்பர இல: 3074
ஈழநாடு மே. பா.
யாழ்ப்பாணம்.
3074

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## அமைச்சரவை...

1ம் பக்கத் தொடர்ச்சி)

சுகாதார அமைச்சராகப் பதவி வகித்த பிரேமரத்ன குணசேகரா தனியார் பஸ் போக்குவரத்து அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்டார். விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித் துறை பிரதியமைச்சராகப் பதவிவகித்த திரு. சந்திரா பண்டார கபால், தந்தி தொடர்பு பிரதியமைச்சராகப் பதவியேற்றுள்ளார். அக்மீமன எம். பி. திரு. சுமனதாச அபய விக்கிரம விவசாய அபிவிருத்தி ஆராய்ச்சித்துறை பிரதியமைச்சராக பதவியேற்றுக்கொண்டார். தெகிவளை எம். பி. திருமதி சுனித்ராரணசிங்கா பிரதி சுகாதாரஅமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

விவசாய அபிவிருத்தி, ஆராய்ச்சித் துறை அமைச்சராகப் பதவி வகித்த திரு. ஈ. எல். சேனநாயக்கா, சுகாதார அமைச்சர் பதவியையேற்றுள்ளதாக பாராளுமன்றத்தில் நேற்று திடீரெனக் குறிப்பிட்டபோது, அங்கு பரபரப்பும், பலத்த கரகோஷமும் இடம்பெற்றது. (வெ)

## மாலினி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி) ஆரம்பிக்கும்.

நீதி: சாப்பிட்டு எவ்வளவு நேரத்தின் பின்னர் முழுச் சாப்பாடும் ஜீரணித்து குடலை விட்டு வெளியேறும்?

பதில்; அது சாப்பாட்டின் தன்மையைப் பொறுத்தது. அநேகமாக மூன்றிலிருந்து ஐந்து மணித்தியாலத்திற்குள் முழுமையாக வெளியேறும். இரவு 1¨-30 மணியளவில் ஆகாரம் அருந்தினால், காலை 7 மணிக்கு செமித்தால், அவரது சிறுகுடலில் செமித்த திரவம் மட்டும்தான்காணப்படும். ஆகாரம் காணப்பட மாட்டாது. இந்த உடலில் சிறுகுடலில் அப்படியான திரவம் காணப்படவில்லை.

நீதி: அதிகாலை 2-30 மணியளவில் நஞ்சு அருந்தியிருந்தால் அது ஒருவரின் உடலில் ஜீரணிக்கும் உறுப்புக்களைப் பாதிக்குமா?

பதில்: அது அருந்திய நஞ்சின் தன்மையைப் பொறுத்தது.

நீதி: சடலத்தின் முகத்தையும் தொண்டையையும் பரிசீலனை செய்தீரா?

பதில்; ஆம். (சி)

(மிகுதி நாளை வரும்)

## யாழ்-திருமலை

## மேலதிக பஸ்சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்குமிடையே நடைபெற்று வந்த வி' ஆர் வி. பஸ் சேவை பிரயாணிகள் நலன் கருதி விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்துக்கும் திருகோணமலைக்குமிடையே காலையில் மட்டுமே நடைபெற்று வந்த வி. ஆர். வி பஸ்சேவை கடந்த திங்கட்கிழமை முதல் மாலையிலும் நடைபெற்றுவருகிறது.

## இன்று பண்ணிசை விருந்து

[யாழ்ப்பாணம்]

தமிழகத்தின் புகழ்பெற்ற பண்ணிசைபாடகியான திருமதி ஜானகி சுவாமிநாதரின் பண்ணிசைக்கச்சேரி இன்று இரவு கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவிலில் நடைபெறும்.


## மரண அறிவித்தல்

### வை. துரையப்பா

அடைவுகடை உரிமையாளர் வை. துரையப்பா காலமாகிவிட்டார். இவர் சின்னச்சிப்பிள்ளையின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற அப்பையா, காலஞ்சென்ற செல்லையா, நல்லதம்பி, காலஞ்சென்ற திருமதி ஐயாத்துரை இராசம்மா ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் 5-5-1982 புதன் கிழமை (இன்று) காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து இருபாலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

பழையவீதி, இருபாலை.

திருமதி சி. துரையப்பாவும் ஆனந்தகுமாரும்.

3080

புத்தம் புதிய டிசைன்களில்
தையலர் மனம் கவரும் நவீன தளபாடங்களுக்கு,

## டில்கா பேணிச்சர் பலெஸ்,

234 — 236, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். போன்: 8186
வாடிக்கையாளர்கள், பக்குவமாக எடுத்துச்செல்லும் வசதியுண்டு.

## லேத் இயக்குநர் தேவை

மூன்று வருடத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள லேத் இயக்குநர் (Lathe Man) தேவை.
சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.
தகுதிக்கேற்ற சம்பளம் கொடுக்கப்படும்.

**சேவி கிளாஸ் அன்ட் மெட்டல்வேக்ஸ்**
**நீர்வேலி.**

3084

உ
சிவமயம்

# சோயோ லபோரட்டறீஸ் லிமிட்டட்.

# "மரகதம்ஸ் ஏஜென்ஸீஸ்"

(உத்தரவுபெற்ற சோயோ தயாரிப்புக்கள் விற்பனையாளர்கள்)
233 1/1, (III), கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
முகவரியில்

Soyo

தரமானதும் நம்பிக்கையானதும் நீண்டகால பாவனைக்கும் பாவியுங்கள்! சோயோ பெயின்ட வகைகள்!!




Whole Sale Distributors:

**MARAGATHAMS AGENCIES,**
233½ (III), Kasthuriar Road, JAFFNA.

# இன்று

# 5-5-82 புதன்கிழமை

காலை 8 மணி தொடக்கம் 9 மணி வரையுள்ள
சுபநேரத்தில்

திரு. எஸ். சிவஞானம் அவர்களால்
(நிர்வாக இயக்குனர், யாழ்ப்பாணம் ஐக்கிய வியாபாரச் சங்கம்.)
ஆரம்பித்து வைக்கப்படும்

அத்தருணம் அன்பர்கள் ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் அன்று நடைபெறவிருக்கும் இன்னிசை விருந்திற்கும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

சிக்கனமானதும் நம்பகமானதும் நீண்டகாலம் நிலைக்கக்கூடியதும் ஆகிய இயல்புகளை உள்ளடக்கியது 'சோயோ'' தயாரிப்புகள்.

உற்பத்திப் பொருட்களின் விபரம்:

1. சோயோ துருத்தடுப்பி
2. சோயோ ''மட்காட்''பூச்சு
3. சோயோ 'டயர் அன் றிம்' பூச்சு
4. சோயோ ''தரை'' பூச்சு
5. சோயோ மரத்தளபாடப் பூச்சு
6. சோயோ''பொலிபினேல்வார்னிஷ்''
7. சோயோ ''கோச் பினிஷ் வார்னிஷ்''
8. சோயோ ''தின்னர்''
9. சோயோ ''மினரல் தேப்பந்தைன்''
10 சோயோ ''பெயின்ரிங் தார்''
11. சோயோ ''பிரெஞ் பொலிஷ்''
12. சோயோ ''வள்ளப் பூச்சு''
13. சோயோ ''பெல்ட் பிறஸீங்''
14. சோயோ 'டி. பி. சி. தார்''
15. சோயோ 'ஏயர்பிரெஸ்னர்ஸ்'
16. ''றிட்'' கிருமி நாசினி

# SOYO LABORATORIES LIMITED

**60, Park Street, : : COLOMBO - 2.**

TELE: 27681, 23792 and 547438


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1982 ஹு மே மீ 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81. Eelanadu—P. O. Box 49, Telegram: 'Eelanadu' T'phone: 389 and 8126.